பக்கங்கள் ௮

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 13 சனிக்கிழமை (27-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 62

# வேலணையில் புலிகளினால் ஈ. பி. டி. பி. முகாம் அழிப்பு!

## ஒருவர் பலி; ஏனையோர் ஓட்டம்; ஆயுதங்களும் மீட்பு

சாவகச்சேரி, ஜனவரி 27
ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட வேலணைப் பகுதியில் ஈ. பி. டி. பியினரின் முகாம் ஒன்றை நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் ஈ. பி. டி. பி. தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். முகாமிலிருந்த ஏனையோர் தப்பி ஓடினர். முகாமிலிருந்த ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

ஏ. கே. ரகத் துப்பாக்கி — ஒன்று, நடுத்தர ரவைகள் - 270, ஏ கே. ரவைக் கூடுகள் — மூன்று, கைக்குண்டுகள் — இரண்டு ஆகியனவே புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின்போது புலிகள் தரப்பில் இழப்புக்கள் எதும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

# ஸ்ரீலங்காவுக்கு யுத்த உதவி இந்தியா வழங்கி வருகிறது!

## கரிகாலன் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, ஜனவரி 27
விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்காவுக்கு இந்தியா யுத்த உதவிகளை வழங்கி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. சிவஞானம் கரிகாலன் இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏனினும் இந்தியா எந்த வகையான யுத்த உதவிகளை வழங்குகின்றது என்ற விவரத்தை அந்தப் பேட்டியில் திரு. கரிகாலன் குறிப்பிட்டு விவரிக்கவில்லை.

அந்தப் பேட்டியில் திரு. கரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலியை தேடிப்பிடிக்கும் முயற்சி கைவிடப்பட்டது!

கடந்த திங்களன்று வடபகுதிக் கடலில் 39 படையினருடன் காணாமற் போன எம். ஐ. 17 ரக ஹெலிக்கொப்டரைத் தேடும் முயற்சியை ஸ்ரீலங்காப் படைகள் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

ஹெலியில் இருந்த படையினர் உயிரிழந்து விட்டதாக கருதப்படுவர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இந்த ஹெலி பருத்தித்துறைக்கு கிழக்கே பத்து கிலோ மீற்றர் தொலைவில் காணாமல் போயிருக்கவேண்டும் என ஸ்ரீலங்கா விமானப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். [உ]

## மகன் அன்ரனோவுடன் பலி தந்தை ஹெலியுடன் மறைவு

லெப்டினன்ட் கேணல், மேஜர் தரங்களைச் சேர்ந்த மூன்று இராணுவ அதிகாரிகளே கடந்த திங்களன்று வடக்குக் கடலில் ஹெலிக்கொப்டருடன் காணாமல் போயிருக்கின்றனர்.

அதிக நேரம் விமானங்களைச் செலுத்தி அனுபவம் பெற்றிருந்த ஸ்குவா[illegible] லீடர் பி. கே. வீர[illegible] இந்த ஹெலிக்கொப்டரைச் செலுத்திச் சென்றவர்.

ஹெலியுடன் காணாமல் போன கடற்படை அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் கிறேற் மாற்றினம் ஸ்கில். இவர் கடந்த செப்ரெம்பர் மாதம் காரைநகர் கடலில் வீழ்ந்து அழிந்த அன்ரனோவ் விமானத்தின் விமானியான [illegible] தந்தையாவார். (உ-6-7)

## பெப். 1 ஆம் திகதி முதல் ஆசிரியர் ஒப்பமிடவேண்டும்

### அதிபர் கூட்டங்களில் முடிவு

சாவகச்சேரி, ஜன 27
வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களும், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிக் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நாளாந்தம் கடமைக்குச் சமுகமளித்து கையொப்பம் இடவேண்டும்.

அந்தந்தப் பகுதிக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள் வெவ்வேறாக நடத்திய கலந்துரையாடல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2 அதிரடிப் படையினர் அம்பாறையில் பலி!

அம்பாறை மாவட்டம் பக்கியெல்ல என்ற இடத்தில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இரண்டு அதிரடிப் படையினர் உயிரிழந்தனர்; மற்றும் இரு அதிரடிப்படையினர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூடுகளின் இடையே சிக்கி கிராம சேவையாளர் ஒருவரும் சிவிலியன் ஒருவரும் உயிரிழந்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. (உ-3)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு தினம் நீடிப்பு

சாவகச்சேரி, ஜன. 27
பங்கீட்டு அட்டைகளை மீள்பரிசீலனை செய்வதற்கான கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான இறுதித் தினம் நேற்று என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தக் கால எல்லை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இந்தப் புதிய காலஎல்லைக்குள் மீளாய்வு வேலைகள் முடியாதவிடத்து கால எல்லையை மேலும் நீடிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —
பங்கீட்டு அட்டைகளின் மீள்பரிசிலனை வேலைகளை முடித்துக் கொண்டவர்கள் நான்காம் கட்ட நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் 6 போராளிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, ஜன. 27
இணுவிலில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்ற நேரடி மோதலில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ-7]

## கோண்டாவிலில் புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 27
படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமம் பகுதியில் — நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் நான்கு படையினர் காயமடைந்ததாக ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## மீட்புநிதிக் கடன் மீளளிப்புப் பற்றி அறிவிப்பு

சவகச்சேரி, ஜன. 27
தமிழீழ மீட்புநிதிக் கடனின் முதலாம் கட்ட கடன் மீளளிப்பின் போது அவற்றை மீளப் பெறாத வலிகாம மக்களின் நலன் கருதி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப் பெயரும் 1-2-96 இல் இருந்து செய்தித்தாள்களில் வெளியிடப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி இதனை அறிவித்துள்ளார். (உ)

## மட்டுநகரில் குண்டு வெடிப்பு

சாவகச்சேரி, ஜன. 27
மட்டக்களப்பில் இரணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பொலீஸ் உயரதிகாரி ஒருவரின் வீட்டுக்கு அருகில் செவ்வாய் அதிகாலை 1.30 மணியளவில் பெரும் குண்டு ஒன்று வெடித்தது. இதனால் நகரம் அதிர்ந்தது. அந்த அதிகாரியின் வீடும் சேதமுற்றதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

## வான், தரை பாதைகள் துண்டிப்பு!

கொழும்பு, ஜன. 27
வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கு தரைவழியாகவும், வான்வழியாகவும் மேற்கொள்ளப்படும் போக்குவரத்துகள் அனைத்தையும் புலிகள் ஸ்தம்பிக்கச் செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரை திருப்திப்படுத்தும் தீர்வு இனப்பிரச்சினையை தீர்க்க உதவாது

## 'ஹிரு' சிங்களப் பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27

தமிழ் மக்களுக்கு இதுவரை இழைக்கப்பட்ட அநீதிகளை நீக்கும் வகையிலான தீர்வுத் திட்டம் ஒன்றையே அரசு முன்வைக்க வேண்டும். சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டங்களால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இப்படி 'ஹிரு' சிங்களப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

தமிழ் மக்கள் நிராகரிக்கும் எந்தத் தீர்வையும் அரசு தமிழ் மக்களிடம் திணிக்க முடியாது. தமிழ் மக்கள் மீது இராணுவ இயந்திரத்தை முழுமையாக ஏவிவிட்டு தமிழ் மக்கள் மீது இராணுவ அழுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வுத் திட்டத்தை திணித்து விடலாம் என்று அரசு எண்ணுகிறது என்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## முதன்மை ஆசிரியருக்கு

வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. நா. தணிகாசலம் பிள்ளை கேட்டுள்ளார்.

# சுகாதார அதிகாரிகள் திடீர்ப் பரிசோதனை

## கிளிநொச்சிக் கடைகளில்!

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சி, பரந்தன், புளியம்பொக்கணை, வட்டக்கச்சி பகுதிகளில் தேநீர்ச்சாலைகள், வெதுப்பகங்கள், பல சரக்குக் கடைகள் போன்றவற்றில் கடந்த சில நாள்களாக கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்க கடை உரிமையாளர்களுக்கு கால அவகாசம் விதிக்கப்பட்டது; காலம் பிந்திய உணவுப் பொருள்கள், மா வகைகள், மருந்து மற்றும் பாவனைப் பொருள்கள் கைப்பற்றப்பட்ட இடங்களிலேயே அழிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கை அடுத்த மாதத்திலும் தொடரும் என கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மு. கந்தசாமி தெரிவித்தார். (உ)

# சகோதரன், தாயாரை இழந்தேன் இது பிறருக்கும் ஏற்படக்கூடாது;

## போராட்டத்தில் இணைந்த மாணவி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 27

எனது தம்பி வடமராட்சித் தாக்குதலின்போது படையினரின் ஷெல்பட்டு இறந்து போனார். எனது தாயாரை கடற்படையினர் கிளாலிக் கடலில் வைத்து வெட்டிக் கொன்று விட்டனர். இந்த துன்பகரமான நிகழ்வுகள் ஏனையோருக்கும் ஏற்படக் கூடாது. ஆகவே இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் போராட்டத்தில் இணைய வேண்டும்.

மண்மீட்புப் போரில் தம்மை இணைத்துக் கொண்ட மட்டக்களப்பு இசைக்கல்லூரி மாணவியான சிந்துஜா ரவீந்திரன் (வயது 22) மேற்கண்டவாறு கூறினார்.

உதயன் செய்தியாளரிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது தம்பியையும் தாயாரையும் இழந்த பின்னர் நான் மட்டக்களப்பு இசைக்கல்லூரியில் சேர்ந்தேன்.

மட்டக்களப்பில் படையினரால் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்களை நேரில் கண்டும் பிறர் மூலம் கேட்டும் எனது உள்ளம் துடித்தது.

எனக்கிருந்த போராளியாக மாற வேண்டும் என்ற வெறியை அச்சம்பவங்கள் மேலும் அதிகரிக்கச் செய்தன.

இனியும் பொறுக்கமுடியாது. இதுதான் இறுதி அழைப்பு என்ற விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று கிளிநொச்சிக்கு வந்து இயக்கத்தில் சேர்ந்து கொண்டேன்.

—இப்படி அவர் கூறினார். (இ-9)

## கல்யாணி புறப்பட்டது

வடமராட்சி, ஜன. 27

பொருள்களை இறக்கி முடித்ததையடுத்து லங்கா கல்யாணி கப்பல் நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு புறப்பட்டுச் சென்றது. (உ-173)

## கிளிநொச்சியில் செய்முறை பரீட்சை

கிளிநொச்சி. ஜன. 27

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையின் நடனம், மனையியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தற்போது நடைபெறுகின்றது.

இடம்பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்பில் வதியும் பரீட்சார்திகளும், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற 3 மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்திகளும் மேற்படி பரீட்சை நிலையத்தில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களை கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தெரிவித்தார். (உ-123)

## வீரச்சாவு

சாவகச்சேரி, ஜன. 27

கடந்த 22 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் நிகழ்ந்த தவறுதலான வெடிவிபத்தில் லெப். தமிழ்வாணன் அல்லது மருதவாணன் (ராமச்சந்திரன் சிவகுமாரன் — கண்டி) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (உ)


## 31 ST REMEMBERANCE



Born: 09 — 07 — 1929

Died: 28 — 12 — 1995

**ALFRED RAJASINGHAM RAJOO**

(Retired Assistant Commissioner of Excise)

'Whosoever believeth in him will not Perish but have eternal life''

May be he knew your faithfulness and loyalty so be had stretched his hands to bid good bye to all of us. There was no choice left for us, but to lent and pray for your soul to Rest In Peace

Fondly remembered by,
his beloved Wife, Children,
Brother, Daughter-in-Law,
Sons-in-Law and Grandchildren.

43, Kachchai Road,
Chavakacheri. (40016)

## உடன் சந்திக்கவும்

உரும்பராய், அம்மன் வீதி, வதனியின் தாயாரான சிவபாதம் என்பவரை அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து உரும்பராய் புண்ணியராணி வீட்டில் தங்கியிருந்த கோமதி தேடுகிறார்: மா. வெற்றி, 69/2, திருவையாறு, கிளிநொச்சி. (40452)

கிளிநொச்சி
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி எமது சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **04-02-1996** (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு அலுவலக மண்டபந்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்களைத் தவறாது சமுகம் தரும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

''நன்றி''

பொன் நித்தியானந்தம்
(செயலாளர்)

(சி/3189)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முன்னாள் அதிபர்

## திரு. அ. பஞ்சலிங்கம்

## சேவைநலன் பாராட்டு விழா

நேரம்: முற்பகல் 10 மணி
நாள்: ஞாயிற்றுக்கிழமை 28-01-96
இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம்

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும் இவ்விழாவில் எமது கல்லூரி உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், மாணவர்கள், கல்லூரி ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இ. மகேந்திரன்
அதிபர்

(சி/2955)

## 31 ஆம் நாளில் நினைவலைகள்

உதிப்பு: 09—09—1913



உதிர்வு: 28 — 12 — 1995

அமரர்

## சின்னத்தம்பி பொன்னம்பலம்

(நவாலி வடக்கு, சிறிமுருகன் நல்லெண்ணை ஆலை உரிமையாளர், K. S. P.)

எங்கள் குலதெய்வமே! இன்று உங்கள் உடல் தான் எங்கள் முன் இல்லை; உங்கள் நினைவும் பாசமும் எங்கள் நெஞ்சங்களிலிருந்து அகலாத இடத்தைப் பிடித்துள்ளன. நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வுலகில் இருக்கும்வரை உங்கள் அன்பு எங்கள் மனக் கண்ணில் நிரந்தரமாகவே இருக்கும். எங்கிருந்தாலும் தொடர்ந்தும் எங்களை வழி நடாத்துங்கள். உங்கள் ஆத்ம சாந்திக்கு தினமும் பிரார்த்திப்போம்.

நவாலி வடக்கு, சோமசுந்தரப் புலவர் வீதியை பிறப்பிடமாகவும், வரணி இயற்றாலையை (கிராம அலுவலகர் இல்லம்) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

உயர்திரு. சி. பொன்னம்பலம்

28-12-1995 அன்று மாரடைப்பால் இறைவனடி சேர்ந்தார்.

இவர் இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், இராசகோபாலு (மானிப்பாய், வேலக்கை விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), நகுலேஸ்வரி, விஜயகுமாரி, தவமணி, சதானந்தன் (Mascans Asbestas Ltd.), கிருபானந்தன் (சிறிமுருகன் நல்லெண்ணை உரிமையாளர், K. S. P.), சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, பாஸ்கரன், கமலாதேவி ஆகியோரின் மாமனாரும், சுகந்தன், சுலோஜனா, சுதாகினி, கஜந்தன், கஜேந்தினி, கிருஷா, தயாளன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இன்று (**27-01-96**) நடைபெறும் **31** ஆம் நாள் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

''மீளாத்துயில் கொண்ட அன்புத் தந்தையே! எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்''.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.
அழியா நினைவுகளுடன் ஆறாத்துயர் சுமக்கும்
அன்பு
கிருபானந்தன் (கிருபா)
குடும்பத்தினர்

வரணி,
இயற்றாலை. (40259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாத ஓய்வூதியம் தாமதமாகவே கிடைக்கும்

சாவகச்சேரி, ஜன. 27

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஜனவரி மாத ஓய்வூதியம் வழங்கும் வேலைகள் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 319 ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை உடன் வழங்க வேண்டும் என்ற அரசின் பணிப்புரை காரணமாகவே யாழ். மாவட்ட இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் தாமதமாகவுள்ளது.

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் மற்றும் அட்டவணைகள் யாவும் கொழும்பில் தயாரானதாகவும் —

வலிகாமத்தில் தங்கியுள்ள 319 ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தை யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கி கிளை மூலமாக வழங்க வசதியாக அவர்களின் கொடுப்பனவு அட்டவணைகளை தனியாக வழங்குமாறு அரசு கோரியதாகவும் — தெரியவந்தது.

இதன் காரணமாகவே வவுச்சர்கள் சாவகச்சேரிக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## அரசாங்க ஊழியர்களின் ஜனவரி மாதச் சம்பளம்

### வழங்க அரச தரப்பு இணக்கம்

சாவகச்சேரி, ஜன. 26

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தங்கி உள்ள அரச ஊழியர்களுக்கு இம்மாத சம்பளத்தை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு ஜனவரி மாதச் சம்பளத்தை வழங்குவதா? அல்லது இல்லையா என்பது குறித்து அரச திணைக்களங்களில் குழப்பம் நிலவியதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 19 ஆம் திகதி திருகோணமலை மாகாண சபையில் நடந்த கூட்டம் ஒன்றில் இந்த சம்பள விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சம்பளத்தை வழங்கப்படுமா? அல்லது இல்லையா? என்பது குறித்து எழுத்து மூலமான கடிதத்தை தருமாறு அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் —

அதைத் தொடர்ந்து மாகாண அரசு அதிகாரிகளுக்கும், மத்திய அரசு அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சை அடுத்து ஜனவரி மாதச் சம்பளத்தை வழங்குவது என முடிவு செய்யப்பட்டதாகவும் — தெரிய வந்தது.

இந்த முடிவையடுத்து மாகாண சபை தனது திணைக்களங்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. (இ-3)

## புதிய ஓய்வூதிய திட்டம்

கொழும்பு, ஜன. 27

அரச மற்றும் தனியார் துறைகளில் ஓய்வூதிய வசதிகள் இல்லாதவர்களின் நலன் கருதி புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட குழு தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்சவிடம் அதன் சிபார்சுகளை சமர்ப்பித்துள்ளது.

உத்தேச புதிய ஓய்வூதியத் திட்டம் ஊழியர் சேமலாப நிதியத்தை அல்லது ஊழியர் நம்பிக்கை நிதியத்தை பாதிக்க மாட்டாது என்று அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். (இ-7)

## உள்ளூர் விமான சேவைக்கு விதிக்கப்பட்ட தடை நீங்கும்!

### முந்திய முடிவை அரசு மீளாய்வு

உள்ளூர் விமான சேவை மீதானதடையை பாதுகாப்பு அமைச்சு அடுத்த சில தினங்களில் மீள் பரிசீலனை செய்யவிருக்கிறது.

பாதுகாப்புக் காரணங்களால் கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கு அமைச்சு தடை விதித்தது.

உள்ளூர் விமான சேவைகள் மீதான தடை உத்தரவு நாட்டில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதால், இந்த விவகாரம் பற்றி பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு தாம் கடிதம் எழுதியுள்ளதாக சிவில் விமானப்போக்குவரத்துப் பணிப்பாளர் மலலகொட தெரிவித்துள்ளார்.

இந்தத் தடை காரணமாக அரசாங்கத்துக்கும், சுற்றுலாத் தொழிலுக்கும் கிடைத்து வந்த வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-3)

## வன்னி பகுதியில் காணி பெற விண்ணப்பம்

இடம்பெயர்ந்த வலிகாமம் பகுதி மக்களுக்கு வன்னிப் பகுதிகளில் காணிகளை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-7)

விமானப் பாகங்களுடன்

## சந்திரிகாவைக் கொல்ல பிரான்ஸிலிருந்து நால்வர் கொழும்பு வருகின்றனராம்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கொலை செய்வதற்காக நான்கு பேர் பிரான்ஸிலிருந்து வந்து கொண்டிருப்பதாகவும்—

இதனை அடுத்து சந்திரிகாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும்—

கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

பிரான்ஸிலிருந்து வரும் நால்வரும் பிரான்ஸில் உள்ள தனியார் விமான நிலையம் ஒன்றில் பணியாற்றுபவர்கள் என்றும்—

விமானம் தயாரிக்கும் பாகங்களுடன் அவர்கள் வந்து கொண்டிருப்பதாகவும் -

விமானம் ஒன்றை அமைத்து தமது தாக்குதல் திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

ராடர் திரையில் தெரியாத சக்தி வாய்ந்த ''அல்ட்ராவைற்'' விமானத்துக்குரிய பாகங்களையே அவர்கள் கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது. (இ-7)

## தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் வீதி விபத்துகள்

### நால்வர் காயம் அடைந்தனர்

தென்மராட்சி, ஜன. 27

வீதி விபத்துக்களில் நேற்று முன்தினம் நால்வர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மூன்று விபத்துக்கள் தென்மராட்சியிலும் ஒரு விபத்து வடமராட்சியிலும் இடம்பெற்றன.

எழுதுமட்டுவாள் ஒட்டுவெளியில் இடம்பெற்ற சைக்கிள் — மோட்டார் சைக்கிள் விபத்தில் சைக்கிளோட்டியான சங்கானையைச் சேர்ந்த த. பாலசிங்கம் (வயது 39) என்பவரும் —

மீசாலை டச்சு வீதியில் திருத்துவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட வாகனத்தின் கயிறு அறுந்ததால் கட்டுப்பாடு இல்லாது சென்ற வாகனம், வீதியால் நடந்து சென்றவரை மோதியதில் புத்தூரைச் சேர்ந்த வே. தம்பு (வயது 62) என்பவரும்—

சாவகச்சேரி டச்சு வீதியில், வீதியால் நடந்து சென்றவரை சைக்கிள் மோதியதால் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த சபாபதி சின்னத்துரை (வயது 65) என்பவரும் காயம் அடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை, தும்பளை பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரான வராத்துப்பளையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சின்னையா (வயது 46) என்பவர் காயம் அடைந்தார் இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம், சாவகச்சேரி கெருடாவிலில் தண்ணீர் அள்ளி வரும்போது தவறி விழுந்து கை முறிந்த நிலையில் சுன்னாகத்தைச் சேர்ந்த இராசரத்தினம் இராகுலன் (வயது 17) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15-117)

# 40ஆண்டுகளாகக் கைப்பற்றிய பகுதிகளை சிங்கள பிரதேசத்துடன் இணைக்கத் திட்டம்

## மாகாண எல்லை மீள்நிர்ணயத்தின் நோக்கம் இதுவே

இலங்கை இனப்பிரசினை தொடர்பாக வெரித்தாஸ் வானொலியில் நேற்று வெளியான அரசியல் கண்ணோட்டம், கட்டுரை வடிவில் தரப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சந்திரிகா அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில், இலங்கையின் 9 மாகாணங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது குறித்தும் ஒரு நகல் உள்ளது.

முதல் இருந்த எல்லைகள் 1955இல் பாரிய அளவில் மாற்றம் பெற்றன. சுதந்திரம் அடைந்த நாடு அபிவிருத்தி வேலைகளுக்கு ஏதுவாக ஆட்சி எல்லைகளை அமைக்க வேண்டும் என்று இதற்குக் காரணம் தெரிவிக்கப்பட்டது.

1901ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி தீவின் மொத்த நிலப்பரப்பில் 71 சதவீத நிலம் சிங்களவரின் மரபுவழித் தாயகமாகும். 29 சதவீத நிலம் தமிழரின் மரபுவழித் தாயகமாகும்.

தீவின் மொத்தக் கடற்கரையின் நீளம் ஆயிரத்து 770 கிலோ மீற்றர். இதில் 35 சதவீதம் மட்டுமே சிங்கள நிலப் பகுதியை அண்டி உள்ளது. ஏனைய 65 சதவீதம் தமிழர் நிலப்பகுதியை அண்டி உள்ளது.

### திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள்

இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையின் இனத்தொகுப்புக்கும் நிலப்பரப்புக்கும் உள்ள தொடர்புகள் மாற்றம் பெறவேண்டும் என்ற கொள்கையுடன் கொழும்பு அரசுகள் செயற்படத் தொடங்கின.

இதன் அடிப்படையில் கல்ஓயாத் திட்டம், பதவியாத் திட்டம், அல்லை, கந்தளாய்த் திட்டம், முசுலித்திட்டம், வெலி ஓயாத் திட்டம் என பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 40 ஆண்டுகளில் சிங்களவர்கள் கைப்பற்றிய 7 ஆயிரத்து 500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும்சிங்கள ஆட்சிப் பிரிவுகளுடன் இணைத்துக் கொள்வதுதான் அண்மையில் அரசால் வெளியிடப்பட்ட மாகாண எல்லை மீள்வரைவுக் கருத்துரையின் நோக்கம் ஆகும்.

கடந்த 162 ஆண்டுகளில் இலங்கைத் தீவின் தமிழரின் மரபுவழித் தாயகத்தில் 50 சதவீத நிலப்பகுதியை சிங்களவர்கள் படிப்படியாக கைப்பற்றி வந்துள்ளனர்.

தொடர்ந்து மேலும் புதிய நிலங்களைத் தமிழர்களிடம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

★ உங்கள் அபிமான நாளிதழ் ★

உதயனின் கிளிநொச்சி கிளை நிலையம்

கண்டி வீதியிலுள்ள கிளிநொச்சி வை. எம். சீ. ஏ. கட்டடத்தில் இயங்குகிறது.

வன்னியில் விளம்பர, விநியோக, செய்தி விடயங்களுக்கு கிளிநொச்சி கிளை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மொறிஸ் மைனர் கார், வில்லியர்ஸ் 12 இந்தியன் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இ. ஜனார்த்தனன், மே/பா க. கதிர்காமர், ''சிவகாமி நிலையம்'', பருத்தித்துறை. (40090)

1995ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், விஞ்ஞானம், தமிழ் (O/L) வினாக்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை, சாவகச்சேரி. (சி-2948)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உள்ளது. விவரம் நேரில் தொடர்பு: சி. கணபதிப்பிள்ளை, மே/பா சி. வல்லிபுரம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை. (40096)

பஜாஜ் ஸ்கூட்டர், சிறிய ஜெனரேட்டர், ஸ்ரீறியோ, றேடியோ, கியர் றலி சைக்கிள் ஆகியன விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு முத்தையா ஆசிரியர், பொன்னம்பலம் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (40237)

1995ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், தம்ழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வர்த்தகம் (O/L) வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8 நவீன சந்தை (உட்புறம்), சாவகச்சேரி (சி.2954)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள லூர்து மாதா கோவிலுக்கு அருகாமையில் உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40098)

### ஆங்கிலம் 96

B.Sc. (Cey)Inter London ஆசிரியரால் Spoken, Written குறுகிய காலத்தில் முன்னேற்றம் காணக் கற்பிக்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கும், மேற்படிப்பு படிப்பவர்களுக்கும் கற்பிக்க முடியும். கடித தொடர்பு மாத்திரம். ஆசிரியர் மே/பா சரவணமுத்து, கமலாச்சி தேவானந்தப் பிள்ளையார் கோவில், கல்வயல், சாவகச்சேரி. (40009)

### வியாபாரிகளுக்கு

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு மாடம், யாழ். வீதி, கிளிநொச்சி. [நீதிமன்றம் முன்பாக). [சி/3176]

### போத்தல் தேவை

ஹொர்லிக்ஸ்/வீவா, ஜாம் போத்தல்கள் உள்ளவர்கள் அவற்றை கிரியோன் கூல்பார், ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் [சாவகச்சேரி], வேலவன் ஸ்ரோர்ஸ், செல்வராஜா ஸ்ரோர்ஸ் (பருத்தித்துறை), சுபாஸ் பேக்கவுஸ், ரேஸ்றலைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் (நெல்லியடி)இல் ஒப்படைக்கவும். பணத்தையும் பெற்றுக்கொள்ளவும். (சி-3090)

### ஆங்கிலம்

பொதுவாக மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளதால் ஆங்கிலம் நேரில் வந்து போதிக்கப்படும். V. N. Kandasamy A I B Part I (London) Inter (London) Dip-in- English. (கைதடிச் சந்திக்கு அண்மையில் உள்ள ஒழுங்கையில் Dr. சபாநாதன் வீட்டுக்கு சமீபமாக), கைதடி. (40014)

### தவறிவிட்டது

உசன், மிருசுவில் பா. றஞ்சனாதேவி என்னும் பெயர் கொண்ட உணவு பங்கீட்டு அட்டை கு. அ. இல. 081820111 தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து உசன் சங்கானை கிளையில் ஒப்படைக்கவும். (40018)

### வகுப்புகள்

அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் Spoken English வகுப்புக்களும், பாலர் வகுப்புகளும் (Nursery) பெப்ரவரி 15ஆம் திகதி முதல் கீழ் உள்ள முகவரியில் ஆரம்பமாக இருக்கின்றன. செல்வி இ. யோசுவா மே/பா T. G. T. சோமசுந்தரம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (40015)

### தேவை

பெண் அறிவிப்பாளர்கள், குரல் வளம் உள்ளோர் மட்டும் விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும். மணிக்குரல் விளம்பர சேவை, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி. (சி-2951)

## பூநகரி ஷெல்லுக்கு சிறுமி காயம்

சாவகச்சேரி, ஜன. 27

பூநகரி இராணுவ முகாமிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான ஷெல்தாக்குதல்களை கடந்த புதனன்று மேற்கொண்டனர்.

அன்று பிற்பகல் 2-30 மணியளவில் விழுந்து வெடித்த ஷெல்களினால் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார். இரு வீடுகள் சேதம் அடைந்தன.

சம்பிராயைச் சேர்ந்த செல்வரட்ணம் தர்ஷினி (10 வயது) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். (இ-7)

## எழுதுவினைஞர் பரீட்சை முடிவு தபாலில்

சாவகச்சேரி, ஜன. 27

எழுதுவினைஞர்களை தெரிவுசெய்வதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் முடிவுகள் நேற்று முன்தினம் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

135 வெட்டு புள்ளியாக கணக்கிட்டு இவர்களில் 25 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆகக்கூடிய புள்ளியாக 162 புள்ளி மாவட்டத்தில் பெறப்பட்டுள்ளது. (இ-3)

## வடமராட்சியில் கோழி நோய்

மந்திகை, ஜன. 26

வடமராட்சிப் பகுதியில் தற்போது கோழிகளுக்கு கொள்ளை நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

பல பகுதிகளிலும் இந்நோயின் தாக்கத்தால் பல கோழிகள் இறந்துள்ளன.

இந்நோயின் தாக்கத்திற்குள்ளான கோழிகள் வெள்ளை நிறத்தில் வயிற்றோட்டம் கண்டு, சோர்வடைந்து உணவு, நீர் எதையும் உட்கொள்ள முடியாத நிலையில் இரண்டு, மூன்று நாள்களுக்குள் இறந்துவிடுகின்றன. (உ-15)

# பயிலுநர் ஆசிரியர் போட்டிப் பரீட்சை

## யாழ்ப்பாணத்திலும் நடக்கும்

தமிழ் மொழி மூல ஆசிரியர்களை தெரிவு செய்யும் போட்டிப்பரீட்சையை அடுத்த மாதம் 24 ஆம் திகதி வலிகாமம், வடமராட்சி - தென்மராட்சிப் பகுதிகளில் நடந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்தது.

பயிலுநர் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை அடுத்த மாதம் 24 ஆம் திகதி நாடெங்கிலும் நடத்த பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த முடிவு செய்துள்ளதாகவும்—

இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் எங்கு நடத்தப்படும் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# தமிழர் பிரச்சினைக்கு நியாயமன தீர்வு தேவை

## அமைச்சர் இந்திகா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

''சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டும்.''

இப்படி கடற்றொழில் அமைச்சர் இந்திகா குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நாட்டில் சிறுபான்மை இன மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். நாட்டு அபிவிருத்தியில் அக்கறை செலுத்தும் எந்தவொரு அரசும் இனப்பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும்.

யுத்தம் ஒன்றில் அரசு வெற்றி பெறுவது சுலபம். எனினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிடில் தொடர்ந்தும் பிரசினைகள் அதிகரித்துச் செல்லும். —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## 40 ஆண்டுகளாக...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கைப்பற்றத் திட்டமிட்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில் தோன்றிய பல நெருக்கடிகளில் ஒன்றுதான் தனி ஈழத்துக்கான போர்.

ஈழப்போர் தொடங்கியதை அடுத்து பல ஈழத்தமிழர்கள் சிதறி அந்நிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அதிலும் குறிப்பாக பலர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

வாழ்வில் கடும்பாதிப்பு, கல்வி வசதிக்குறைவு, தொண்டர் நிறுவனங்கள் முகாம்களுக்குச் செல்ல முடியா நிலை, அவர்கள் மீது கடுமையான கண்காணிப்பு என தமிழகத்தில் பல இன்னல்களுக்கு அவர்கள் ஆளாகின்றனர்.

### தமிழகம் முதலில் வரவேற்றது

தமிழகம் 1981 முதல் 1987 வரை ஈழத்தமிழர்களை மாலையிட்டு வரவேற்றது. 1987 முதல் 1991 வரை மாசற்ற கேண்மையைக் கடைப்பிடித்தது 1991க்குப் பின்னர்தான் வெறுப்புணர்வு தலைதூக்கியது.

1991ஆம் ஆண்டுக்குப் பின்னரும் போதும் போதும் உங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போங்கள் என்ற தம் உள்ளக்கிடக்கைக் கூட தமிழக மக்கள் வாய்திறந்து சொல்லவில்லை.

கடந்த 15 ஆண்டு காலப் பகுதியில், முதலில் மாலையிட்ட வரவேற்பு. பின்னர் மாசற்ற கேண்மை, அதன் பின்னர் போதும் போதும் என்ற வெறுப்பு என மூன்று படி நிலைகள், ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் இருந்து வந்துள்ளன.

வரம்பு மீறல்களைத் தவிர்த்து வன்முறைகளை நிகழ்த்தாமலும் —

தமிழகம் பொழியும் அன்பு மழைக்கு நன்றியாகவும் —

பெருமதியானவர்களாகவும் — வாழ்ந்து காட்டுவது ஈழத்தமிழர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாக இன்றுள்ளது.

### பாச உணர்வு மீண்டும் தலை தூக்குகிறது

பட்டுப்போய் விட்டதோ என்று அஞ்சிய பாச உணர்வு இன்று மீண்டும் தலைதூக்கியுள்ளது.

ஈழத்தமிழர் மீது நல்லுணர்வும், பாசமும் பெருகிவர ஆரம்பித்துள்ளன.

இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது தமிழகத்தில் வாழ்கின்ற ஈழத்தமிழரின் தலையாய கடமையுமாகும்.

கடைசியில் தமிழினம் முழுவதும் கட்சி வேறுபாடுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஈழத்தமிழர் பிரச்சினையில் ஓரணியில் திரண்டிருப்பது மகத்தான ஒரு நிகழ்வு எனலாம்.

ஈழத்தில் நடக்கும் இனப்படுகொலையை கண்டும் காணாததும்போன்று நடந்துகொள்ளும் இந்தியப் பிரதமரை இந்த ஒற்றுமை விழித்துக்கொள்ளச் செய்யும் என்று தமிழகம் எதிர்பார்த்திருக்கிறது. அதே சமயத்தில் இலங்கை அரசும் இதன் உட்பொருளை புரிந்து கொள்ளுமென நம்பியும் இருக்கிறது.

ஒரே வரியில் கூறுவதானால், ஈழத்தமிழர்கள் அனாதைகள் அல்லர் என்பதைத் தமிழகத் தாயகம் தனக்குள் உள்ள வேறுபாடுகளை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு ஆர்த்தெழுந்து நிரூபித்திருக்கிறது.

ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாக இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால்இனம், மொழி, பண்பாட்டு அடிப்படையில் அவர்கள் தமிழினத்தின் ஒரு கூறு. தமிழ் உலகின் ஓர் அங்கம். தாயகத் தமிழகம் தனது உயிர்ப்புடைய உறுப்பு ஒன்று அழிக்கப்படுவதால் துடிக்கிறது.

இதை இந்தியத் தலைநகர் புதுடில்லியும், இலங்கைத் தலைநகர் கொழும்பும் அரசியல் வட்டாரங்களும் உடனடியாக உணர்வது அவசியமாகும்.

தமிழரின் மனப்பரப்பை வெல்ல முடியாமல் அவர்களது நிலப்பரப்பெங்கும் தன் படையை நிலைபெறச் செய்துவரும் இலங்கை அரசு தொடர்ந்து தான் வகுத்துள்ள தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்துவருகிறது.

அந்தத் தீர்வின் முக்கிய அம்சம் மாகாண எல்லைகள் மீள்வரைவாகும்.

இந்த மீள்வரைவு மூலம் தமிழரின் மரபு வழி நிலங்கள் சிங்களமயமாக்கப்படுவதையே தமிழரின் தனி ஈழத்தாகம் எதிர்த்து வருகிறது. (இ-7)


## தமிழீழ மக்களுக்கு ஓர் நற்செய்தி

உங்கள் பண நெருக்கடிக்கு தீர்வு காண

★ குறைந்த வட்டியில் இலகுவான முறையில்

★ அடகு கடன் ★

★ வெளிநாடுகளிலிருந்து இலகுவாக, விரைவாக பணத்தைப் பெறும் வாய்ப்பு

★ நீங்கள் இதுவரை எதிர் பார்த்திருந்த நடைமுறைக் கணக்கு

05 – 02 – 1996 முதல் ஆரம்பமாகிறது.

மேலும் பல பயனுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள தமிழீழ வைப்பகத்தை நாடுங்கள்.

தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

BANK OF TAMILEELAM

(சி/3187)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்திரிகாவுக்கு மனமுண்டா?

இராணுவம் ஆக்கிரமித்துள்ள வலிகாமம் பகுதியில் மூன்று 'பாடசாலைகளை மீண்டும் இயக்குவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதன் பொருட்டு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ். நகரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வலிகாமத்தில் தனது நிர்வாகம் நடப்பதாக வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்கும், அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை கவர்ந்திழுப்பதற்குமாக இரட்டை நோக்கத்துடன் அரசு மேற்கொள்ளும் கண்துடைப்பு முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

கூட்டிக் கழித்துப் பார்த்தாலும் வலிகாமத்தில் ஆகக் கூடியது ஐநூறு மாணவர்கள் தேறினார்கள் இல்லை. இவர்களின் கல்வியில் அக்கறை கொண்டிருப்பதாக நடிக்கும் சந்திரிகா—

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, வன்னி பெருநிலப்பரப்பு ஆகிய நான்கு பிரதேசங்களிலும் உள்ள மூன்று லட்சத்து இருபத்தையாயிரம் மாணவர்களின் கல்வி உரிமையைப் பறித்துள்ளார். அவர்கள் தமது அருஞ்செல்வம் எனக் கருதும் அடிப்படை மனித உரிமையை அபகரித்துள்ளார்.

இது குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தாம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தக்க ஆதாரங்களுடனும் புள்ளிவிவரங்களுடனும் விளக்கி உள்ளார்.

வலிகாமத்தில் உள்ள பாடசாலைகள் படை முகாம்களாகவும், ஏனைய மூன்று பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் அகதி முகாம்களாகவும் மாறியிருப்பதால்—

மூன்றேகால் லட்சம் தமிழ் மாணவரின் கல்வி உரிமை—முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான கல்வி வசதி— பறிக்கப்பட்டுள்ளது குறித்து—

ஆசிரியர் சங்கச் செயலாளர் மிக ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த நிலையைப் போக்குவதானால் வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள நாற்பதாயிரம் படைகளையும் விலக்கி, அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீண்டு சென்று வாழ வகை செய்ய வேண்டும் என்று அவர் தமது மகஜரில் வலியுறுத்தி உள்ளார்.

ஸ்ரீலங்கா அரசுகளின் ஏமாற்றுக்கள், கண்துடைப்புகள், ஆசை வார்த்தைகள், போலி வேடங்கள், கால்வாரல்கள் என்பனவற்றை ''கரைத்துக் குடித்தவர்கள்'' தமிழ் மக்கள்.

எனவே தமது நடிப்பைக் கண்டு அவர்கள் இனிமேல் எந்தவிதத்திலும் ஏமாறமாட்டார்கள் என்பதனை சந்திரிகா மனதிற் கொள்ள வேண்டும்.

உலகத்தை வேண்டுமானால் சில காலத்துக்கு ஏமாற்றலாம். ஆனால் தமிழர்களை ஒரு நாள் பொழுதுக்கும் அவ்வாறு செய்ய முடியாது.

இதனை உணர்ந்து தமிழ் மண்ணில் இருந்து படைகளை முற்றாக விலக்கி தமிழர்களுடன் சமரசம் காணச் சந்திரிகா முன்வர வேண்டும். அதற்கு அவருக்கு மனமுண்டா?

---

தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே

# குளத்து நீரை திறந்துவிட இராணுவத்தினர் மறுப்பு

## மூதூரில் பயிர் நிலங்கள் அழிகின்றன

சாவகச்சேரி, ஜன. 27

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே உள்ள மூதூர், பள்ளிக்குடியிருப்பு விவசாய நிலங்களுக்கு குளத்து நீர் வழங்கப்படாததால் இண்டாயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழிந்துள்ளன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு குளத்து நீரைத் திறந்துவிட படையினர் அனுமதி வழங்க மறுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்குடியிருப்பிலுள்ள மறைமாவட்டக்குளம் கிராண்டக்குளம், சின்னக்குளம் ஆகிய பகுதிகளிலேயே இந்த இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களும் உள்ளன.

கடந்த கோடை கால சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது பெரும்போகமும் இதே காரணத்தினால் அழிந்துள்ளது

குளத்து நீர் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளுக்கே திறந்து விடப்படுகிறது.

மூதூர், ஈச்சிலம்பத்தை பிரதேச செயலர் பிரிவில் 15 ஆயிரம் ஹெக்டேயர் நெற்பயிர்கள் நீரின்மையால் அழிந்துள்ளன.

விவசாய உள்ளீடுகளுக்கு தடை உள்ளவேளையில் பெரும் கஷ்டத்தின் மத்தியில் விவசாயம் மேற்கொள்ளும் மக்களுக்கு தண்ணீர் வசதி மறுக்கப்படுவது பெரும் அநீதி என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

## அதிபரின் சேவை நலன் பாராட்டு விழா

மிருசுவில், ஜன. 27

ஓய்வுபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தின் சேவை நலன் பாராட்டு விழா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

(உ-111)

## யுத்தத்துக்கு 1995 இல் ரூ.4,200 கோடி செலவு

கொழும்பு, ஜன. 27

கடந்த வருடம் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு 4 ஆயிரத்து 200 கோடி ரூபா செலவிடப்பட்டதாக தகவல் தொடர்பு சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

யுத்தம் முற்றாக நிறுத்தப்பட்டால் பெருந்தொகையான பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

மகாவலி நிலையத்தில் வியாழன் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி உரையாற்றுகையில், அரசாங்கம் விவேகமான முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சி செய்து வருகிறது என்றார்.

[இ-3]

## படை நடவடிக்கை பற்றி இப்படி ஒரு கிண்டல்!

செய்தித் தணிக்கை மீளப்பெறப்பட்ட பின்னர் பத்திரிகைகள் அரசாங்கத்தின் கொள்கைகளை, நடவடிக்கைகளை, திட்டங்களை இயலாமையை பல்வேறு கோணத்தில் கிண்டல் செய்ய ஆரம்பித்துள்ளன. அவ்வாறான கிண்டல்களில் ஒன்று இது. கொழும்புஆங்கில வார இதழ் ஒன்றில் அதன் கட்டுரையாளர் ஒருவர் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக எழுதிய கண்ணோட்டம் ஒன்றின் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம்:-

எலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட வீடு ஒன்றுக்கு குடியிருக்கச் சென்ற குடும்பம் பற்றிய கதையை, இப்போதைய இராணுவ நடவடிக்கையின் போக்கு எனக்கு நினைப்பூட்டுகின்றது.

''இந்த எலிகளுடன் இவ்வளவு காலமும் எப்படித்தான் அவர்கள் இந்த வீட்டில் குடியிருந்தார்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே!'' என முன்பு அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் குறித்து புதிய குடியிருப்பாளர்கள் எல்லோருக்கும் கூறித் திரிந்தனர்.

தாங்கள் சில நாட்களுக்குள் எலிகளை வீட்டை விட்டு விரட்டி விடப்போவதாகவும் அவர்கள் கூறினர்.

இறுதியில் அந்தக் குடும்பத்தினர் எலிகளை ஒழித்துக் கட்டுவதெனத் தீர்மானித்து அந்த வீட்டின் வடக்குப்புற அறையைத் துப்பரவாக்கினர். சில எலிகளை அவர்களால் கொல்லவும் முடிந்தது.

ஆனால் பெருமளவிலான எலிகள் வீட்டின் மற்றைய பாகங்களுக்கு இடம்பெயர்ந்தன. இதனால் சோர்வுற்ற அந்தக் குடும்பத்துக்கு வட பகுதி அறையிலிருந்து எலிகளைத் துரத்த ஒரு வாரம் பிடித்தது.

அடுத்ததாக அந்த வீட்டின் கிழக்குப்புற அறையில் எலிகளைச் சந்திக்க அவர்கள் முற்பட்டனர்.

ஆனால் அங்கிருந்த எலிகளில் பெருமளவானவை வடக்குப் புறத்திலிருந்த பிரதான அறைக்குள்ளும் கிழக்கு அறைக்குப் பக்கத்தில் இருந்த ஏனைய அறைகளுக்கும் சென்றன.

எலிகளை முற்றாக அழிப்பதில் தங்களது இயலாமை அதிகரித்து வருவதை அந்தக் குடும்பத்தினரால் சில நாட்களில் உணர முடிந்தது.

இருப்பினும் மாதக் கணக்காக — வருடக் கணக்காக — எலிகளை அழிக்க முயன்றனர். இறுதியில் இயலாமையால் தங்கள் முயற்சிகளைக் கைவிட்டு, எலிகளுடன் வாழப் பழகிக் கொண்டனர்.

''எப்படித்தான் இந்த எலிகளுடன் வாழ்ந்தார்களோ!'' என முன்னைய குடியிருப்பாளர்களைக் குறை கூறுவதையும் அவர்கள் கைவிட்டனர். — இவ்வாறு அந்தக் கட்டுரைப் பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கிண்டல் எதைப் பற்றியது என்பதை நீங்கள் இப்போது புரிந்திருப்பீர்கள். [illegible]

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

27 – 01 – 1996

இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8.02 நீங்கள்கேட்டவை.
- ★ 3. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

28 – 01 – 1996

காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7. 02 —மாவீரர்வணக்கம்
- ★ 7-10 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 - பத்திரிகைச் செய்திகள்
- ★ 7. 45 அறிவிப்புகள் — தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

---

## நிதித்துறை அறிவித்தல்; வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ திருமதி செல்லையா தங்கரத்தினம் -– செல்வரங்கம், இணுவில் மேற்கு, சுன்னாகம்.

★ பொன்னர் சின்னையா — அச்சுவேலி வடக்கு, ஊரியான், அச்சுவேலி.

★ சுந்தையா நாகராசா அல்லது இரஞ்சிதம் நாகராசா — பார்வதி பவனம், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

★ ஆண்டிஐயா அம்பலவிமுருகன் — இல 02, பேரின்பநாயகம் ஒழுங்கை, கண்டி வீதி, சுண்டுக்குளி.

★ தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் — பத்தைமேனி, அச்சுவேலி.

★ தாமோதரம்பிள்ளை வசந்தாதேவி — தையிட்டி புலம, தெல்லிப்பளை.

★ திருமதி மாலினி சந்திரராஜா — 34/01, கல்லூரி வீதி, நீராவியடி.

★ கமலா நவரட்ணம் — செல்வாவீதி, தொல்புரம், சுழிபுரம்.

★ திருமதி வேனடிட்டா ராசா—136, பங்ஷால்வீதி, யாழ்ப்பாணம்.

★ துரைராஜா சவுந்தரராஜா — 245, 2 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

★ திருமதி மலர் புஸ்பராஜன் — அராலிவடக்கு, வட்டுக்கோட்டை.

★ இராசையா பரமேஸ்வரன் – அப்பிளை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ நளினி செல்வராஜா — சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ வெள்ளையன் தெய்வேந்திரன் — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

★ நாகமணி ராஜரட்ணம் — 91/01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ செல்லத்துரை துரைசிங்கம் —சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

★ அருளப்பு செபஸ்தியாம்பிள்ளை — சேர்ச் வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

★ சுவாம்பிள்ளை அன்ரனிராசா —தாசன் சோடா கம்பனி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ இராசம்மா இராசையா — சிறிவிக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ வேலுப்பிள்ளை நவரத்தினம்— ஏழாலை கிழக்கு. ஏழாலை.

★ சிவபாக்கியம் வேலாயுதபிள்ளை — இணுவில் தெற்கு, இணுவில்.

★ திருமதி பத்தினிப்பிள்ளை கந்தசாமி — மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

★ சி. என். தங்கநாதன் —பல்கலைக்கழக ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

★ எஸ். செல்லையா அல்லது எஸ். ஜெயமுதலி — வரணி வீதி, மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

★ சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை அல்லது சரவணமுத்து கந்தசாமி — கைதடி வடக்கு. கைதடி.

★ திருமதி சரசுவதி நாகரத்தினம் — சிவன்கோவில் றோட், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ கந்தசாமி இராசரத்தினம் — மே/பா. ஆ. கந்தசாமி, ராமாவில், மீசாலை வடக்கு, கொடிகாமம்.

★ திருமதி இராசக்கிளி பரஞ்சோதி — மே/பா. பி. கருணாகரன், கெற்பலி, மிருசுவில்.

★ பாலசிங்கம் தர்மரட்ணம் — கண்ணன் கோவில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ நடராசா கந்தசாமி — மணிப்பல்லவம், கைதடி தெற்கு, கைதடி.

★ முத்தர் கந்தையா — மே/பா. சி. செல்வபாஸ்கர், மட்டுவில் தெற்கு, மருதங்குளம், சாவகச்சேரி.

★ கந்தையா தில்லையம்பலம் — மே/பா. ஆர். திலகேஸ்வரன், மீசாலை கிழக்கு, மீசாலை.

★ திருமதி லாளி ஜெயபாலன் — மே/பா. ரவீந்திரகுமார், நவசோதி இல்லம், புகையிரத வீதி, சாவகச்சேரி.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கிட்டு அட்டைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் கட்ட நிவாரண விநியோகம் திட்டமிட்டபடி இம்மாதம் 25 ஆம் திகதியிலி ருந்து நடைபெற்றுவருவதாகவும்—

அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

# அதிகாரப் பரவலாக்கல் இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை

## பிக்குகள் மத்தியில் சந்திரிகா உரை

கொழும்பு, ஜன. 27

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் மட்டுமே தீர்வு காணமுடியும்.

— இவ்வாறு நேற்று ஸ்ரீலங்கா பிக்குமார் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

தமது அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை பிக்குமாருக்கு விளக்குவதற்காக இந்தக் கூட்டத்தை சந்திரிகா குமாரதுங்க அழைத்திருந்தார்.

கொழும்பில் சுமார் 800 பிக்குகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றினார்.

அங்கு அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதப் பிரச்சினையே என்று சில கல்விமான்கள் கூறுவதை நான் நிராகரிக்கின்றேன்.

சிறுபான்மையினருக்கும் சம உரிமைகள் உள்ளன. பெரும்பான்மைச் சிங்களவர்கள் அதனை ஏற்று அங்கீகரிக்க வேண்டும்.

அதற்காகவே இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம்.

இதனை மக்கள் ஏற்கச் செய்வதற்கான முயற்சியில் மகாநாயக்க தேரர்களும் தலையிட்டு ஈடுபடவேண்டும்.

பயங்கரவாதத்தை படைபலத்தால் ஒடுக்கவேண்டும் என்றாலும் ஏனைய பிரச்சினைகளுக்கு அது தீர்வாகாது.

— என்றார்.

இந்தக் கூட்டத்தை மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் உட்பட மூன்று முக்கிய பௌத்த மத பீடங்களின் தலைவர்களும் பகிஷ்கரித்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6-7)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் நல்லமுத்து

(குப்பிளான்)

குப்பிளான் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது சின்னப்பூவரசங்குளம், புளியங்குளம் என்னும் முகவரியில் வசித்தவருமான நாகலிங்கம் நல்லமுத்து 22-1-96 இல் காலமானார்.

தகனக்கிரியைகள் 23-1-96 நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. இரஞ்சிதமலர்
(மகள்)

(40261)

### நாகேஸ் இராசதுரை

(முன்னாள் போக்குவரத்துச் சபை சாரதி)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நாகேஸ் இராசதுரை 24-01-96 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சு. நாகேஸ் செல்லாச்சியின் அன்பு மகனும், திரவியத்தின் அன்புக் கணவரும், விஜயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஜெகமலர், ஞானகுலேந்திரன் (பிரான்ஸ்), ஜெயரஞ்சனி, சந்திரசேகரன், ஜெயகுமார் (கனடா), வசந்தகுமார், தயானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பாலசரஸ்வதி (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம், லலிதா (பிரான்ஸ்), ஜெயரட்ணசிங்கம், யோகராஜா (கனடா), விமல்ராஜ் (பிரான்ஸ்), ரஜனி ஆகியோரி அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

தகவல்:
இ. சந்திரசேகரன் (மகன்)

தற்போதைய முகவரி:
C/o சி. கந்தசாமி,
மிருசுவில் ஆஸ்பத்திரி முன்ஒழுங்கை,
தவசிகுளம்,
கொடிகாமம்.

(40017)

### வைத்திலிங்கம் கணேஷன்

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர்)

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட வைத்திலிங்கம் கணேஷன் ஜேர்மனியில் காலமானார்.

இவர் வைத்திலிங்கம் மனோன்மணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் ஜெயவீர் (ஹொங்கொங்), மனோகரி (பிரான்ஸ்), சுமதி [கனடா], சுகந்தி, சங்கர்ராஜ் [ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுஜாதா, இந்துவர்மன், சபேசன் விஜயவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஷிஷாந்தின் [ஹொங்கொங்] சித்தப்பாவும், சுதர்மன், ஹேர்மன் [பிரான்ஸ்], பிரவீணா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வை. சங்கர்ராஜ்
(சகோதரன்)

கிளிநொச்சி.
[40260]

திருமதி
### பரமலிங்கம் காமாட்சியம்மா

(நயினாதீவு)

திருமதி பரமலிங்கம் காமாட்சியம்மா 25 01.96 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், க. வே. பரமலிங்கம் (J.P) அவர்களின் அன்பு மனைவியும், குகதாசன் (இத்தாலி), மோகனதாசன் (காந்தி) (வர்த்தகர் - நீர்கொழும்பு), கமலாதேவி (மகாவலி அபிவிருத்தி அமைச்சு) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி (இத்தாலி), மங்களேஸ்வரி, பரமேஸ்வரன் (திருப்பதி ஜுவல்லர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற வாலாம்பிகை, பராசக்தி, ஏகநாதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, கண்மணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் (27.01.96) இன்று கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஆறுமுகம்
(சகோதரன்)

மே./பா. சி. ந. கதிர்வேலு
தேனா வளவு,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(விக்னேஸ்வராக் கல்லூரி அண்மையில்)

(40101)

## யாழ். நகரில் பஸ் சேவையாம்!

கொழும்பு, ஜன. 27

யாழ்ப்பாண நகரில் அடுத்த வாரத்தில் இருந்து பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும்—

இதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து செய்து வருகின்றனர் என்றும்—

வடபகுதி பிரதி பொலீஸ் அத்தியட்சகர் சிறிசேன ஹேரத்தை மேற்கோள் காட்டி கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இச்சேவைக்கு தேவையான பஸ்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஏற்பாட்டில் இந்த வாரத்தில் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## சைவக் குருமார் கூட்டம்

சாவகச்சேரி, ஜன. 27

இலங்கைச் சைவக் குருமார், அர்ச்சகர் பேரவையின் விசேட கூட்டம் நாளை காலை 9 மணிக்கு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி கோவிலடியில் நடைபெறவுள்ளது

இடம்பெயர்ந்த சைவக் குருமார், அர்ச்சகர்களின் விவரம் இக்கூட்டத்தில் சேகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## பெப். 1 ஆம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் எங்கு கடமைக்குச் சமுகமளித்துக் கையொப்பம் இட வேண்டும் என்பதனை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் அறிவிப்பார்கள்.

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு கையொப்பமிடும் பாடசாலை விவரத்தை அறிந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளுக்கு நாளாந்தம் சென்று கையொப்பமிட வேண்டும்.

கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள்—

தாம் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள வலயம் இரண்டின் பாடசாலை ஒன்றில் கையொப்பம் இடலாம் என்று—

வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி அறிவித்துள்ளார். (அ-31-112-173)

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு கிளிநொச்சியில் குடியிருப்பு

### விவரம் பதியக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன. 27

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதியில் தங்கியுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணிமனைகள், பாடசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

குடியிருப்பு வசதிகள் தேவைப்படுவோர் தமது விவரங்களை பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்யவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சிக்கு இலவசப் பாட நூல்கள்

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய — 1996 ஆம் ஆண்டுக்கான — இலவச பாட நூல்கள் கல்வி அமைச்சினால் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றை கிளிநொச்சிக்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் கல்விப் பணிப்பாளர்களின் மாதாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த அவர் கடந்த புதனன்று கிளிநொச்சிக்குத் திரும்பினார். (உ-123)

## வட்டமிட்ட மர்ம விமானம்

சாவகச்சேரி, ஜன. 27

வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வடமராட்சி கடற்பகுதிகள் மீது கண்ணுக்கு எட்டாத அதி உயரத்தில் விமானம் ஒன்று நேற்று நண்பகல் வேளை வட்டமிட்டுச் சென்றது. நீண்டநேரம் கேட்ட இந்த விமானத்தின் இரைச்சலினால் பல பகுதிகளில் பரபரப்பு நிலவியது.

[உ-15 31-117-173]

## ஸ்ரீலங்காவுக்கு..,

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

காலன் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ அரசின் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை தற்போது புலிகள் கைவிட்டு விட்டனர். ஆனால் விடுதலைக்கான கெரில்லாத் தாக்குதல்கள் தொடரும்.

★ அரசின் தீர்வுத் திட்டம் உத்தியோகபூர்வமாக புலிகளுக்கு கையளிக்கப்படவில்லை. எனவே அது குறித்து புலிகளுக்கு பூரணமாகத் தெரியாது. அத்துடன் அதன் இறுதி வடிவம் எப்படி அமையும் என்றும் இப்போதே கூற முடியாது. எனினும் அந்தத் தீர்வுத் திட்டத்தை நேரடியாகவோ அல்லது நடுநிலையான மூன்றாம் தரப்பு ஒன்றுஊடாகவோ அரசு சமர்ப்பிக்குமானால் அதனைப் புலிகள் பரிசீலனை செய்வர்.

★ யாழ். நகரைப் புலிகள் கைவிட வேண்டி ஏற்பட்டதேயாயினும் அதற்குப் பதிலாக கிழக்குப் பகுதியில் எண்பது வீதமான பிரதேசத்தைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். (உ-6-7)

## மீன்பிடிக்க அனுமதியாம்

பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில், கடலில் ஒரு மைல் தூரம் வரை சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள சென். சாள்ஸ் கனிஷ்ட பாடசாலையை அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றின் போது இத்தகவலை அவர் தெரிவித்தார். [அ-6]

## வல்வைகடலில் கப்பல்

வல்வெட்டித்துறை — தொண்டமானாறு கடற் பகுதியில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலொன்று காணப்பட்டது. (உ-173)

## கெடுபிடி!

மட்டக்களப்பில் 'சூரிய ஒளிக்கற்றை' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட படையினர் தோல்வியுடன் முகாம்களுக்கு திரும்பியுள்ளதை அடுத்து தமிழ் மக்கள் மீது அவர்கள் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 27-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org